02.06.2026

OS. No.348/**2025**

**வா.சா.1 –** திரு.தியாகராஜன், த/பெ கே.எம்.வெங்கடாசலம்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>குறுக்கு விசாரணை :–</u>**

இந்த வழக்கின் பிரதிவாதி எனது மூத்த சகோதரர் ஆவார். என் தகப்பனார் எட்டரை கிராமத்தில் மளிகை கடை நடத்தி வந்தார். நான் பிறந்த போது என் தகப்பனார் எட்டரை கிராமத்தில் மளிகை கடை நடத்தி வந்தார். என் தகப்பனார் அந்த கடையை வாடகைக்கு எடுத்து நடத்தி வந்தார். நான் 1974 ஆம் வருடம் பிறந்தேன். அப்போது நாங்கள் சொந்த வீட்டில் வசித்து வந்தோம். அந்த வீடு என் தகப்பனாருக்கு பாகப்பிரிவினையில் பங்காக கிடைத்தது ஆகும். என் சகோதரர் 1970 ஆம் வருடம் பிறந்தார். என் தகப்பனாருக்கு மளிகை கடையில் இருந்து கிடைத்த வருமானத்தை வைத்து தான் எங்கள் கல்வி செலவு மற்றும் குடும்ப செலவுகள் செய்யப்பட்டது. என் தகப்பனார் கடினமாக உழைத்து மளிகை கடையில் இருந்து வந்த குறைந்த வருமானத்தை வைத்து குடும்பத்தை நடத்தினார் என்றால் சரிதான். பிரதிவாதி பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறாத காரணத்தினால் என் தகப்பனார் உடன் சேர்ந்து மளிகை வியாபாரத்தில் கலந்து கொண்டார் என்றால் இல்லை. என் தகப்பனார் எட்டரை கிராமம் தவிர வியாழன் மேடு என்ற பகுதியிலும் ஒரு மளிகை கடை நடத்தி வந்தார். வியாழன் மேடு பகுதியில் உள்ள மளிகை கடை 1981 அல்லது 1982 ஆம் வருடம் துவங்கப்பட்டது. வியாழன் மேட்டு பகுதியில் உள்ள கடையின் உரிமையாளர் பெயர் புல்லான் ஆகும். அந்தக் கடைக்கு பெயர் எதுவும் வைக்கவில்லை. அந்த கடைக்கு முருகானந்தம் ஸ்டோர்ஸ் என உண்டா என்றால் பெயர் எதுவும் வைக்கவில்லை. வியாழன் மேடு பகுதியில் 1986 ஆம் வருடம் முருகானந்தம்

ஸ்டோர்ஸ் என்ற பெயரில் பிரதிவாதி தான் கடையை துவங்கினார் என்றால் இல்லை. அந்த கடையை என் அப்பா தான் துவங்கி நடத்தி வந்தார். எட்டரை கிராமத்தில் உள்ள கடையை என் அம்மா பார்த்துக்கொண்டார். நானும் அந்த கடையை பார்த்துக் கொள்வேன். 1986 ஆம் வருடம் நான் என்ன படித்துக் கொண்டு இருந்தேன் என்றால் எட்டாம் வகுப்பு படித்திருப்பேன். நான் பள்ளிக்கு சென்று விட்டு வந்த பிறகு கடை பார்த்துக் கொள்வேன். பிரதிவாதி முருகானந்தம் எந்த காலத்திலும் கடையை பார்த்தது கிடையாது என்பது என் தரப்பு வாதம் ஆகும். வியாழன் மேடு பகுதியில் உள்ள கடையில் தான் வியாபாரம் நன்றாக இருந்தது. அந்த கடையில் இருந்து வந்த வருமானத்தைக் கொண்டு தான் சொத்துக்கள் வாங்கப்பட்டது. முருகானந்தம் கடைக்கு செல்லாமல் எங்கு செல்வார் என்றால் வாரத்திற்கு ஒரு நாள் தான் வீட்டிற்க்கே வருவார். 1989 ஆம் வருடம் வியாழன் மேட்டில் நடந்து வந்த கடையிலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டுதான் சொத்து வாங்கப்பட்டது என்றால் எட்டரை கிராமத்தில் நடந்து வந்த கடையில் இருந்து வந்த வருமானத்தையும் சேர்த்து தான் சொத்து வாங்கப்பட்டது. ஐந்தரைச் செண்டு நிலத்தில் மூன்று கடைகள் கட்டப்பட்டது. அந்த கடைகளில் கதவு எண்கள் 1/203, 1/204, 1/205 ஆகும். அந்த கடைகளில் ஒரு கடை ராஜா ஏஜென்சிஸ் என்ற பெயரில் உரக்கடையும், சைக்கிள் கடை, எலக்ட்ரிக்கல் சாமான்கள் விற்பனை செய்துவரப்பட்டது என்றால் மூன்று கடைகளிலும் சேர்த்து அந்த தொழில் நடத்திவரப்பட்டது. அந்தக் கடையை பிரதிவாதி மட்டும் தான் நடத்தி வந்தார் என்றால் சரி அல்ல. நானும், அப்பாவும், அக்காவும் சேர்ந்து நடத்தி வந்தோம். உரக்கடை, சைக்கிள் கடை, எலக்ட்ரிக்கல் சாமான்கள் கடையானது 1990 ஆம் வருடத்தில் துவங்கப்பட்டது. அப்போது நான் பத்தாம் வகுப்பு முடித்துவிட்டு பாலிடெக்னிக் சேர்ந்து இருந்தேன். நான் பாலிடெக்னிக் படிப்பு முடித்துவிட்டு தினமும் கடைக்கு வந்து விடுவேன். நான்

Vaigai

காரைக்குடியில் உள்ள பாலிடெக்னிக்கில் தங்கி படித்து வந்தேனா என்றால் வாரம் இரு முறை ஊருக்கு வந்து விடுவேன். நான் 1988 முதல் 1991 வரை பாலிடெக்னிக் படிப்பு படித்தேன். எனது மூத்த சகோதரிக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் நான் அப்போது எட்டாம் வகுப்பு அல்லது ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டு இருந்தேன். வருடம் நினைவில்லை. என் சகோதரியின் திருமணச் செலவை என் தகப்பனார் உடன் சேர்ந்து பிரதிவாதி முருகானந்தம் தான் செய்தார் என்றால் என் தகப்பனார் தான் செய்தார். 26 சென்ட் நிலம் 1996 இல் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் ஆயிரம் சதுர அடி பரப்பளவில் வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே இடத்தில் 2000 சதுர அடி அளவில் வீடும் ஒரு கிட்டங்கியும் கட்டப்பட்டது என்றால் சரிதான். என் சகோதரர் முருகானந்தம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாமல் போன பிறகு தற்போது வரையிலும் எந்த தொழிலும் செய்யவில்லையா என்றால் எந்த தொழிலும் செய்யவில்லை. என் அண்ணன் உரக்கடை நடத்துவதற்கு ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் 1997 இல் தனியாக பிரத்தியேகமாக ஒரு படிப்பு படித்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்தப் படிப்பை வைத்து தான் உரக்கடை நடத்தினார் என்றால் அவர் திருமணம் ஆன பிறகு தனியாக ஒரு கடை நடத்தினார். என் அப்பா என் அண்ணன் பெயரில் தனியாக ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் ஒரு சொத்து வாங்கினார். அதில் தான் அவர் தனியாக ஒரு உரக்கடை நடத்தி வந்தார். என் அண்ணனுக்கு 2003 ஆம் வருடம் திருமணம் நடைபெற்றது. சொத்து 1996 ஆம் வருடம் வாங்கப்பட்டது. அந்த இடம் விவசாய நிலம் ஆகும். அந்த விவசாய நிலத்தில் தான் பிரதிவாதி கடை நடத்தி வந்ததாக சொல்கிறேனா என்றால் பின் பகுதியில் விவசாயம் நடைபெற்று வந்தது. முன் பகுதியில் கடை நடத்தி வந்தார். நான் 1989 முதல் 1993 வரை டிப்ளமோ படித்தேன் என்றால் தவறாகும். டிப்ளமோ படிப்பு மூன்று

Vaidya

வருட படிப்பு ஆகும். பிரதிவாதி பெயரில் பொது தொலைபேசி நிலையம் நடத்தப்பட்டதா என்றால் என் அப்பா தான் அதை மளிகை கடைக்கு முன்பாக நடத்தி வந்தார். இரண்டு மூன்று வருடத்தில் அதையும் எடுத்து விட்டோம். அதற்கான உரிமம் பிரதிவாதி பெயரில் தான் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வியாழன் மேட்டில் உள்ள கடையில் தான் அந்த பொது தொலைபேசி நிலையம் இருந்தது. கேபிள் டிவி தொழில் பிரதிவாதி நடத்தி வந்தாரா என்றால் அதை நான் தான் நடத்தி வந்தேன். 1995 ஆம் வருடம் அந்த தொழில் நடத்தினேன். அதற்கு உரிய ஆவணங்கள் என் கைவசம் இருக்கிறது. அதை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியும். எனது சகோதரி திருமணத்தை பிரதிவாதி தான் 1996 ஆம் வருடம் செலவு செய்து நடத்தினார் என்றால் என் அப்பா தான் செலவு செய்து திருமணத்தை நடத்தினார். எனது படிப்பு செலவு கடையில் இருந்து வந்த வருமானத்தை வைத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் 1994 ஆம் வருடம் படிப்பை முடித்த பிறகு கடைக்கு வந்தேன் என்றால் சரி அல்ல. எட்டரை கிராமத்தில் நடத்தி வந்த கடையில் வருமானம் சரியாக வரவில்லை என்றும், அந்த கடையில் என் தகப்பனார் நடத்தி வந்தார் என்றும், அது சரிவர நடக்காத காரணத்தினால் 1995 ஆம் வருடம் என் தகப்பனார் மூடிவிட்டார் என்றால் 2000 வருடத்தில் அந்த கடை மூடப்பட்டது. வியாழன் மேடு பகுதியில் நடத்தி வந்த மளிகை கடை, உரக்கடை, சைக்கிள் உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் கடை மற்றும் மின் உபகரணங்கள் விற்பனை செய்யும் கடையிலிருந்து வந்த செலவு போக வருடம் ஒன்றுக்கு ரூபாய் பத்து லட்சம் கிடைத்தது என்றும் அந்த பணத்தை வைத்து தான் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் அந்த கடையில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் சொத்துக்கள் வாங்கப்பட்டது, ஆனால் வருடம் ஒன்றுக்கு செலவு போக ரூபாய் பத்து லட்சம் கிடைத்ததா என்று எனக்கு

VerdictumIn

தெரியாது. என் தகப்பனார் தான் வரவு செலவுகளை கவனித்து வந்தார். என் தகப்பனாருக்கு 2000 வருடத்தில் ஒரு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த விபத்தின் காரணமாக என் தகப்பனாருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவுகளுக்காக ரூபாய் 18 லட்சம் வரை பிரதிவாதி முருகானந்தம் செய்தார் என்றால் சரியல்ல. அதற்கு மூன்று லட்சம் ரூபாய் தான் செலவானது. அதை நான் தான் செய்தேன். நான் எந்த ஒரு மருத்துவச் செலவும் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக செலவழித்ததாக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரி அல்ல. கேபிள் டிவி தொழிலை கோப்பு பகுதியில் ஏற்கனவே நடத்தி வந்த ஒரு நபர் நடத்த முடியாமல் விட்டதால் அதை பிரதிவாதி முருகானந்தம் வாங்கி நடத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கேபிள் டிவி தொழில் நடத்துவதற்கு பேங்க் ஆப் பரோடா வங்கியில் பிரதிவாதி முருகானந்தம் ரூபாய் 25000 கடன் பெற்று டிஷ் ஆன்டனா வைத்து நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. கேபிள் டிவி லைசன்ஸ் பிரதிவாதி பெயரில் இருந்தது என்றால் ஆரம்ப காலத்தில் இருந்து எனது பெயரில் மட்டும் தான் கேபிள் டிவி லைசன்ஸ் உள்ளது. பிரதிவாதி நடத்தி வந்த கேபிள் டிவி தொழிலை 2003 ஆம் வருடம் தம்பி என்ற முறையில் பார்த்துக் கொள்ள சொல்லி என்னிடம் கொடுத்தார் என்றும், நான் அபகரித்துக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்து இல்லை. அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்தா என்று பரிசோதித்து அறிக்கையை பெறுவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. கடந்த 11.03.2006 அன்று என் தகப்பனார் பிரதிபாதிக்கு உறுதிமொழி கடிதம் எழுதிக் கொடுத்தார் என்றும், அந்த கடிதத்தில் என்னுடைய திருமணம் முடிந்த பிறகு சொத்தை சமமாக பிரித்து தருவதாக கூறியிருந்தார் என்றும், பிரதிவாதிக்கு தற்போதைய ஜீவனத்திற்கு

Vakeel

வழிவகை செய்ய வேண்டும் என்று ஒரு கடையும், குடியிருப்பதற்கு ஒரு வீடும் கொடுத்துள்ளேன் என்றும், அதை என் தகப்பனார் தனது முழு சம்மதத்துடன் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நோட்டுப் புத்தகத்தில் உள்ள கையெழுத்துக்கள் யாருடையது என்று எனக்கு தெரியவில்லை. அதில் என்னுடைய கையெழுத்து இருக்கிறது என்றால் இல்லை. என் தகப்பனார் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான அசையும் சொத்துக்கள் விபரத்தை எழுதச் சொன்னதால் நான் தான் அதை கைப்பட எழுதினேன் என்றும், அதில் நானும், என் சகோதரர் முருகானந்தமும் கையொப்பம் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணம் என் தரப்பு வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து இல்லை என்று வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி குடும்பத்தின் மூத்த உறுப்பினர் என்ற முறையில் வியாழன் மேட்டில் தான் நடத்தி வந்த மளிகை கடை மற்றும் சைக்கிள் உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் கடை, மின் உபகரணங்கள் விற்பனை செய்யும் கடைகளில் இருந்து கிடைத்த வருமானத்தை தகப்பனாரிடம் கொடுத்து சொத்துக்கள் அனைத்தும் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்தக் கடையை பிரதிவாதி முருகானந்தம் தான் நடத்தி வந்தார் என்றும் ஆனால் நானும், என் தகப்பனாரும், சகோதரியும் சேர்ந்து நடத்தி வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் அனைத்து சொத்துக்களையும் வாங்குவதற்கு மூலமாக இருந்தார் என்றும் ஆனால் நான் வழக்கிற்காக அவர் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் சொத்துக்களை பிரித்துக் கொடுப்பதாக கூறி வந்தார் என்றும் என் தகப்பனார் இறந்த பிறகு நான்

சொத்துக்களை அபகரித்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டு வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா ஏற்கனவே என் அண்ணனுக்கு தனியாக சொத்து வாங்கிக் கொடுத்திருக்கிறார். இந்த விபரத்தை நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சொல்லி இருக்கிறேன். எனது பெயருக்கு என் தகப்பனாரிடம் இருந்து எழுதி வாங்கி இருக்கக் கூடிய தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லக்கூடியது இல்லை என்றும் அனைத்து சொத்துக்களும் என் சகோதரர் உழைப்பின் அடிப்படையில் கிடைத்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றும் அந்த சொத்தில் அவருக்கும் பங்கு இருப்பதால் நான் தனிப்பட்ட உரிமை கோர இயலாது என்றால் சரி அல்ல. நான் எந்த காலத்திலும் மளிகை கடையிலும் மற்ற கடைகளிலும் நடந்த வியாபாரத்தில் பங்கு கொண்டது கிடையாது என்றும் வழக்கிற்காக நானும் கடையை சேர்ந்து நடத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் நடத்தி வந்த கேபிள் டிவி தொழிலை பார்த்துக்கொள்ள சொல்லிக் கொடுத்ததையும் சட்டத்திற்கு புறம்பாக அபகரித்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட சொத்துக்கள் அனைத்திலும் பிரதிவாதிக்கு பங்கு இருப்பதால் நான் தனிப்பட்ட உரிமைகோர இயலாது என்றால் சரியல்ல. நான் என் தகப்பனாரை ஏமாற்றி மோசடியாக ஆவணம் வாங்கி இருக்கிறேன் என்றால் சரி அல்ல. நான் கேட்டிருக்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்று சொன்னால் சரி அல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Copy

# Web copy